**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.702/2024 நாள்- 02.04.2025

**பி.வா.சா.1- அபூர்வசாமி**

**<u>பி.வா.சா.1-ன் குறுக்குவிசாரணை வாதி தரப்பில்</u>**

நான் திருவிழாவில் பொம்மை மற்றும் பழுன் விற்பனை தொழில் செய்து வருகிறேன். நான் 1ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் போடத்தெரியும். 30.7.2019 அன்று வாதியும் நானும் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டோம் எ ன்றால்சரிதான். அந்த கிரையஒப்பந்தம் இந்த வழக்கு சம்பந்தமானது என்றால் சரிதான். கிரையஒப்பந்தம் கெடு காலம் 1 மாதம் என்றால் சரிதான். அதாவது அந்த கெடுகாலத்திற்குள் வாதி கிரைய தொகையை கொடுத்து கிரையம் பதிவு ெசய்து கொள்ள வேண்டும் என்று நிபந்தனை உள்ளது என்றால் நான் கடனாக தான் தொகையை பெற்றிருந்தேன். கிரையஒப்பந்தம் பத்திரம் எப்போது முடிவுக்கு வந்தது என்று எனக்கு தெரியாது. கிரையஒப்பந்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான விதியின் படி முறையாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் காலவதியாகிவிட்டதால் நான் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டேன் என்றால் புதுபிக்கதான் சென்றேன். அவ்வாறு ஏற்படுத்திக் கொண்ட 2 வது பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. 28.11.2022 ம் தேதி இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக வாதியின் பெயருக்கு ஒரு கிரையஒப்பந்தம் செய்து கொடுத்தேன் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் மற்றும் புகைப்படம் என்னுடையது தான். வாசா.ஆ.1 யை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 யை சார்பதிவாளர் அலுவகத்தில் பதிவான விதியின் படி முறையாக பதிவு செய்யப்பட்டது என்றால்சரிதான். அப்படி பதிவு செய்யும் போது இந்த சொத்து எ னக்கு எவ்வாறு கிடைத்தது எ ன்று மூல ஆவணத்தின் நகல், மின்

கட்டண இரசீது , வரி இரசீது ஆகியவற்றை வாதி வசம் ஒப்படைத்தேன் என்றால் மூல ஆவணத்தின் அசலையும் மின் கட்டண இரசீது, வரி இரசீது அசலை 2019 ம் ஆண்டே வாதி வசம் ஒப்படைத்துவிட்டேன். 2022 ல் ஏற்படுத்திக் கொண்ட ஆவணத்தில் 2021 ம் ஆண்டு செலுததிய வரி இரசீதையும், 2022 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கட்டிய மின் கட்டண இரசீது அசலையும் வா.சா.ஆ.1 பதிவு செய்யும் போது கொடுத்தேன் என்றால் சரிதான். கடந்த 28.11.2022 ம் தேதி சட்டப்படி வழக்கு சொத்தை வாதிக்கு ரூ.4,00,000/- கிரைய பேசுவதாக ஒப்புக் கொண்டு அதற்கு முன்பணமாக ரூ.3,80,000/- பெற்று வாசா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுததேன் என்றால் அப்போது நான் பணம் வாங்கவில்லை. கிரையஒப்பந்தம் படி பாக்கி தொகை ரூ.20,000/- வாதியிடம் இருந்த பெற்றுக் கொண்டு கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 28.11.2022 ம் தேதி வாதியும், நானும் ஏற்படுத்திக் கொண்ட கிரையஒப்பந்தம்பற்றி ஒரு வாரத்தில் எனக்கு தெரியும். அந்த ஒரு வாரத்தில் வாதி ஏமாற்றி கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டதை ரத்து செய்ய எவ்வித சட்ட நடவடி்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி கிரையஒப்பந்தத்தின் படி ரூ.20,000 யை எனக்குகொடுத்து கிரையம் பதிவு செய்ய விருப்பமாகவும், தயாராகவும் இருக்கிறார் என்று எனக்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் அந்த அறிவிப்பை பெற்றுக் கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான்ா. நான் உண்மையிலேயே வாதிக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு கிரையஒப்பந்தம் பதிவு செய்துகொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் சட்டப்படி ஏற்படுத்திக் கொண்ட கிரையஒப்பந்தம் படி நான் வாதிக்கு கிரையம் செய்து கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. கிரையஒப்பந்தம் படி கிரையம் செய்து கொடுக்காமல் ஏமாற்றி வருகிறேன் என்றும், வாதியிடம் பெற்ற முன்பணத்தையும் திருப்பி செலுத்தாமல்

ஏமாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.